

**சக்தி பௌண்டேஷன் - Uni EDUCATION**

**Topic: எம்முள் நிறைந்த மஹாகவி... [வசன கவிதை]**

**[கடந்த ஒரு வாரமாக எம்முள் அலைபாயும் ஒரு மஹானின் அதிர்வலைகள்]**

---

பாரதீ!
இவ்வாறு அடிக்கடி எழுதுவது நம் பள்ளிப் பழக்கம்!

இரண்டு வயதில் தந்தை காட்டிக் கொடுத்த பெரிய மீசை, கறுப்புக் கோட் பாரதி!

இரவில் தூங்கும் முன் அவர் பாடும் "சிந்து நதியின் மிசை நிலவினிலே!"

விருதுநகரில் லயன்ஸ் க்ளம் பள்ளியில் ஆண்டு விழாவில் பார்த்த பெரிய அண்ணாக்களின் பாரதி மாதிரி வேஷம்!

ஈரோட்டில் பாரதி வித்யா பவனில் சேர்ந்த போது, இது பாரதி படித்த பள்ளியோ என்று குழந்தைக்கே உரிய தேடல்!

நான்காம் வகுப்பில் L.M.ராஜேஸ்வரி அம்மை எடுத்த "பாப்பாவுக்கு பாரதி" துணைப்பாடம்!

"கணக்கு,பிணக்கு,ஆமணக்கு" என்று குட்டி பாரதியின் குரல் தமிழ் ஆசிரியையின் குரலில் இன்னும் ஒலிக்கிறதே!

பத்து-பதினொன்று-பன்னிரெண்டாம் வகுப்புகளில் ஸ்ரீமான் குருமூர்த்தி ஐயாவின் இசைக் கூட்டிய பாரதி பாடல்கள்!

ஸ்ரீமதி. ஜெயலக்ஷ்மி அம்மையின் "ஜெய பேரிகை", "ஆடுவோமே", "வெற்றி எட்டுத் திக்கும்" ஆகிய பாடங்கள் பள்ளியில் எம்மை உருக்கின.

அவர் எம்முள் இருக்கும் பேச்சுக் கலையை பாரதியைக் கொண்டே வெளிக்கொண்டு வந்த வித்தை!

பல போட்டிகளில் அன்று பாரதியின் வேத சத்ய வாக்குகளுடன் முழக்கமிட்டுக்



Napier Bridge – Madras 1895

கோப்பைகளை அள்ளிக் கொண்டு வந்த நாட்கள்!

கல்லூரிக் காலங்களில் கோவை பி.எஸ்.ஜியில் Thinkers association ஊக்குவித்த பேச்சுகளில் பாரதி என்னுள் வேர் ஊன்றிய காலம்!

முதன் முதலில் ஸ்ரீமதி.M.S.சுப்புலக்ஷ்மியின் "நெஞ்சுக்கு நீதியும்" கேட்டு அழுத காலம். வாழ்வில் மிகப் போராட்டமான காலத்தில் உடனே அப்பாடலைக் கேட்டு என்னை மீட்டுருவாக்கம் செய்தது!

யேசுதாஸின் "வந்தே மாதரம்", மஹாராஜபுரம் சந்தானத்தின் "வெள்ளைக் கமலத்திலே", "மோஹத்தைக் கொன்று விடு", "சின்னஞ்சிறு கிளியே!" எம்மை ஜீவ தத்வத்தை நினைக்கத் தூண்டின.

பின்னர் நீண்ட காலம் தமிழ் ஆசியராக பாரதியைப் பிடித்துக் கொண்டே காலம் கடத்தியது.

சக்தி வழிபாடு, சக்தி தொண்டு நிறுவனம் மூலம் அவரது பல கருத்துக்களை என்னுள்ளும் நம் பணிகளுள்ளும் உட்புகுத்திய இறைவன் தந்த விழிப்புணர்வு!

இன்று சமீப காலமாக பாரதியின் கருத்துக்கள் Uni5 education system செயல்பட மிகப் பெரிய உந்து சக்தியாய் இருப்பதை உணர்ந்து, என்னுள் இருக்கும் அவர் திடீரென தன் கட்டுரைகளின் மிக முக்கிய கருத்துக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வைத்துக் கொண்டு இருக்கும் சித்து லீலை!

பாரதி கண்ட சித்தர்கள் மூலம் அவர் வள்ளலார், பட்டினத்தார், பாம்பன் ஸ்வாமிகள் வரிசையில் எம்முள் சென்னை வாழ் சித்த மஹானாய், எம் சக்தியாய், சத்குருவாய், கூடுவிட்டு கூடு பாய்ந்த கதியில் இருக்கும், வழிகாட்டும் லீலையை என்னென்பேன்?!

தேடித் தேடி அலைந்து கிடைக்காத வ.ராவின் மகாகவி பாரதியார் நூலை, ஹிக்கிம்போத்தம்ஸில் இந்த இடத்தில் இருக்கிறது என்று விழிப்புணர்வாய் இருந்து 29.8.2012 அன்று அவர் செய்த லீலை!

அவரது இரண்டு வரலாறுகள் என்னை அவரது பிறப்புடன் தொடர்புள்ள



ஆன்மாவைக் காட்டுகிறது!

அவரது வேத சத்ய உண்மைகளைக் காலக்ரமத்துக்கு ஏற்ப உலகிற்கு எளிய வழியில் ஆங்கிலத்தில் கூறும் படி அன்னை உத்தவிட்டாள் என்பேன்!

மஹான் பாரதியின் வேத சத்ய வாக்கியங்கள் ஜீவன் முக்திக்கு உரிய பாதைகளே என்பதில் ஐயம் எமக்கு இல்லை!

திருவல்லிக்கேணி வீதிகளில் அவரது அடிச்சுவடுகள் தேடி அலைகிறேன்!

பார்த்தசாரதி கோயில் மதில் கற்கள் தாம் அவரைக் கண்ட கதைகள் கூறின!

மெரீனா மண்ணும், அலைகளும் அவர்தம் இசையையும் வேத சத்ய பாடல்களையும் ஒலிப்பதிவு செய்ததை உணர்கிறேன்!

தினமும் ஸ்நானம் செய்தவுடன் குருமுகமாய் அவர் திருபாதங்களில் தீர்த்தம் செய்யும் அடியேனுக்கு சில வாரங்கள் முன் அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் அறிமுகம் ஆகி ஆசீர்வதித்ததை என்னென்பேன்?

சென்னைக் காளிகாம்பாள் பாரதியின் நாவில் உலவிய விதமும், பார்த்தசாரதி கண்ணன் பாட்டில் தலைவனாய் இருக்கும் கம்பீரமும் என்னுள் ஆன்மீக அலைகளைச் சுனாமிகளாய் எழச் செய்து ”நான்-எனது” என்ற சுயநிலையை மறக்கச் செய்கின்றன.

ஐயோ! அன்று அவர் வாழும் போது நான் இல்லையே!
எம்மை வாழ வைக்கும் மதறாஸுக்கு நன்றி!
எம் தேடல்களுக்கு உறுதுணை செய்யும் சக்திக்கு நன்றி!

இன்று என் தாய் தானம் தரும் பல பொருட்களை அன்று வாரி வாரி அவரது வீட்டில் வைத்திருப்பேனே?

எத்தனை பத்தாறு வேஷ்டிகளை எத்தனை பேருக்குத் தந்தேன்? அவர் ஸ்ரீபாதங்களில் சமர்ப்பித்து இருப்பேனே?

இரண்டு நாட்களாய் கைகள் உணவை ”அள்ளி போட மாட்டேன்” என்று அடம் பிடித்து அவர் இருந்த பட்டினியைக் காட்டுகின்றனவே?

அவர் இல்லம் முன் அவர் ஆன்மாவின் சாக்ஷியின் கீழ் இன்று காலை உலாவினேன்!
இதோ இவ்விடத்தில் தான் அமர்ந்தார்!
இங்கே உண்டார், படுத்தார், எழுதினார், பாடினார்!
பாரதி, அவர் இல்லாள், மக்கள், தோழர்கள், அவர் வழிபட்ட மூர்த்திகளின் புகைப்படம், கை எழுத்து ப்ரதிகள்...

மேல் மாடி நூலகத்தில் மிக்க மரியாதையுடன் அவரது கையெழுத்து ப்ரதிகளை அடியேனுக்குக் காட்டிய இரு இஸ்லாமிய அலுவலக சகோதரிகள்!

அதோ மாடியில் இருந்து பார்த்தசாரதி கோயில் முழுமையாகத் தெரிகிறதே!
கண்ணன் பாட்டு உருவான கர்ப்ப க்ரஹம் இதுவன்றோ?

யாராவது அவரைப் பார்த்தவர்கள் இன்னும் இங்கே உண்டா? அலைகிறேன்!

க்ருஷ்ணாம்பேட்டை மயானம் - பாரதியின் பூத உடல் பஞ்சபூதங்களுடன் ஐக்யம் ஆன இடம்!

ஆழ்வார்கள் பாடிய அல்லிக்கேணி, பாரதியின் தமிழால் எதிரொலிக்கிறது!

”தர்மத்தைக் காக்க நான் வருவேன்” - என்று கூறிய கீதாச்சாரியன் பாரதி வடிவில் அவன் கோயிலுக்கு அருகில் இருந்தே தமிழ் மொழிக்கும் சமூஹத்துக்கும் உழைத்தான்!பார்த்தசாரதி ”பாரதி கீதை” எழுதி இருக்கிறார்!

அதோ இங்கே தான் இறுதிக் கட்ட காட்சி!
அதோ இக்கதவின் வழி தானே அவர் வருவார், போவார், ஒரேடியாகப் பாடையின் மீது யாரும் இன்றிப் போனார்!

யானை மிதித்த கல் மண்டபம்!

பார்த்தசாரதியின் மீசை!
அவர் அவருள் அத்வைத்தமாய் இருப்பதைக் காட்டுகின்றன!
நேற்று பெருமாளுக்குப் பவித்ரோச்சவம்!

கண்ணீர் மல்க அவரிடம் கேட்கிறேன்,
"ஹே! பார்த்தசாரதி! உன்னையே நம்பி உன் வீட்டுக்கு அருகில் தன்னை வைத்துக் கொண்டு அர்ஜுனனாக வாழ்ந்த எம் தலைவர் எங்கே?"

பெருமாள், "அடேய்! அத்வைத்தம் உன்னிடம் இல்லையோ? அவரே யாம்! அவர் தமிழில் நம்மைத் தேடுக!"

வேதவல்லித்தாயர் சன்னிதியில் அன்னையிடம் கேட்டேன், "தேவி! குசேலனைக் காட்டிலும் குசேலனாய் எம் பாரதி இருந்து பக்தி செய்ய, வீட்டின் அருகில் இருந்தும் நீ ஏனம்மா கனகதாரா பொழியவில்லை?"

கோயிலில் அவர் ஸ்ரீபாதம் தீண்டிய இடமெல்லாம் தேடுகிறேன்.
ப்ராட் வே, தம்புச் செட்டி வீதி, மெரீனா பீச், நேஃபியர் பாலம், மயிலை, வேப்பேரி,காளிகாம்பாள் கோயில், ராயபேட்டை ஆஸ்பத்ரி [அவர் இறுதி சிகிச்சை பெற்ற இடம்] ஆகியன எம் ஷேத்ரங்கள்!

தர்மம் மிகு சென்னைக்கும் எனக்கும் இத்தனை உறவா?!
**ஞானச்சித்தர் கூட்டம் சென்னையில் இன்னுமல்லோ ஜீவன் முக்தி ஸ்தலங்களில் நமக்கு வழிகாட்டுகின்றன?**

புதுவைக்கு விரைவில் செல்ல வேண்டும்! அவ்வூரின் ஒவ்வொரு பாகத்தையும் காண வேண்டும், பாரதியை உணர வேண்டும்!

அவரை ஸ்மரிக்க ஸ்மரிக்க அன்னை ப்ரபஞ்ச சக்தியாய் எம்முள் தீயாய் எரிவதை உணர்கிறேன்!

எவ்விதப் பலனும் இன்றி உழைக்கக் கற்று வருகிறேன்!

ஐயோ நான் அவரை விட ஆயுள் அதிகம் வாழ்கிறேனே என்று புலம்புகிறேன்!

அவரது வேத சத்ய வாக்குகளை எதார்த்த வாழ்க்கையில் முக்தி வேண்டிப் பள்ளிகளிலும், மேடைப் பேச்சுகளிலும், எழுத்திலும், இணைய தளத்திலும், சக்தி உபாசனையிலும், ஆன்மீக சாதனைகளிலும், லோக தர்மத்திலும் அடியேன் பின்பற்ற முயற்சிப்பேன்!

பாரதியைப் பார்த்துத் தான் "ஓம் சக்தி!" என்று உச்சரிப்பதாகவும் எழுதுவதாகவும்

எம் பாட்டி[அம்மாவின் அம்மை] என்றோ கூறியதைப் போற்றுகிறேன்!

அவர் காலத்தில் அவருக்கு அண்டித் தொண்டு செய்ய முடியாமல் போய், ஏங்கி - அன்னையின் அருளால் அவர் தம் அனுமதியால் இன்று அவரது வேத சத்ய கருத்துக்களை முன்வைக்க முயல்கிறேனோ?

அவர் மயமாகவே இருக்கிறேன்!
தம்பூராவில் ஸ்ருதி சீரானது, "யாதுமாகி நின்றாய் காளி!" தினம் எம் பூஜைகளில் ஒலிக்கிறது.சதா MP3ல் "நெஞ்சுக்கு நீதி" கேட்கிறது!

"நின்னைச் சரண் அடைந்தேன்!" என்று மனம் அழுது அழுது அன்னையிடம் எம் அறியாமைகளை எரிக்க வேண்டுகிறது!

மாலையில் எம் வீட்டுள் எம் அறையுள் ஆன்ம சக்தியாய் பாரதியைக் காண்கிறேன், அவர் கேட்க, அவர் க்ருதிகளை அவருக்கே அர்ப்பணிக்கிறேன்!
என்னே ஆனந்தம்!

பூஜையில் இருக்கும் மஹா சக்தி அன்னையும் அவரும் வேரல்லவே?!

இன்று மாலை அவர் photoவை எடுத்துப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும், பூஜையில் வைக்க வேண்டும், நவராத்ரியில் காளியுடன் சேர்த்து வைத்து அவரையும் பூஜிக்க வேண்டும் என்று அருகில் உள்ள கடைக்குச் சென்றேன். யாம் எண்ணிய அதே புகைப்படத்தினை பாரதி அன்பராகிய கடைக்காரர் எடுத்துக் காட்டுகிறார்.

எம் கணிணியின் திரையில் எம் பாரதி! எம்முள் அன்னை இருந்து எழுதும் அனைத்தையும் தன் சாக்ஷியாய் வெளியிடுகிறார் அல்லோ?

அவர் விரும்பிய காளியை உருவாக்கி அவள் அருகில் அவரை வைத்து நவராத்ரியை அனுஷ்டிக்க வேண்டும்!

வங்காளக் காளிக்கு அருகில் பரஹம்சரும், பாரதியும் இம்முறை வீட்டு கொலுவில் இருப்பார்கள்!!!

அவரது சக்தி பாமாலைகளே தமிழ் தேவி சூக்தங்கள்!
அவரது கண்ணன் பாடல்களே ஸ்ரீமத் தமிழ் பாகவதம்!




ஸ்ரீவைஷ்ணவனாகிய எமக்கு அதன் உண்மையை உணர்த்திய சங்கர-மத்வ-ராமானுஜன் எம் பாரதி! நம்பெருமாளையும் அன்னை மஹாசக்தியையும் எம் இரு கண்கள் ஆக்கிவிட்ட ஆச்சார்யன் பாரதி! அவரது கண்ணம்மாவே நாம்! நம் ஜீவன்! அவள் ப்ரஹ்மத்துடன் ஐக்யம் ஆகத் தானே இவரை ஒத்த மஹான்கள் நம்மிடையே வருகிறார்கள்!?

நல்ல ஆன்மாக்களின் பாதைகள் நம்முள் இருக்க வாழ்க்கை ஆனந்தமும் அர்த்தமும் ஆகிறது!

தினமும் உறங்கும் முன் உலகிற்கு வேண்டிய ஏதாவது ஒரு கருத்தையாவது எழுது இணைய தளத்தில் இணைக்க அன்னை முன் வரம் வேண்டிச் செயல்படுகின்றேன்!

அவரது வறுமை என்னை இன்று வாட்டுகிறது! ஆனால் அவர் தம் SAL ENERGY விழிப்புணர்வு எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது!

அவரது ஒவ்வொரு வேத சத்யக் கருத்தை எழுதி Dr.ப்ரதீப் குமாருக்கு அனுப்பும் போதும், அவருக்கு நேரடியாகத் தொண்டு செய்த அனுபவமும் ஆனந்தமும் ஏற்படுகின்றது!

சாவைப் பற்றியும் வ்யாதியைப் பற்றியும் எதிர்காலம் பற்றியும் மறு பிறவி பற்றியும் அணுவளவும் கவலை இல்லை! காரணம்: பாரதி என்ற அருமருந்து!

குழந்தை ஒன்று ஏங்கித் தவித்து ஏமாறும் கதியே பாரதியின் வாழ்க்கை!
அந்த ஒவ்வொரு கட்டத்தையும் எண்ணும் போது அவன் தாயாக இருந்து அழ வேண்டும்!
அவை என் வாழ்க்கையில் நிறைவேறாத தர்மமான தார்மீக வேண்டுதல்கள் போலத் தான் உள்ளன.
உலகில் உள்ள அத்தனை உயர்வுக்கும் ஆசைப் பட்டான்!
ஏன் கிடைக்கவில்லை?
SAL ENERGY இல்லையா?
இல்லை, அதை அணுவளவும் அவன் இவற்றிற்குச் செலவிட விரும்பவில்லைக
அவனது லக்ஷியம் - பரகதி மோக்ஷம்!

ஒரு வேளை அவர் காலத்தில் வாழ்ந்திருந்தால் இன்று அவரது பணிகளை மேற்கொள்ள முடியாமல் போய் இருக்கும்! அதான் இன்று நாம் வாழ்கிறோம்!

**எழுதவும் எண்ணவும் கேட்கவும் பகிர்ந்து கொள்ளவும் பார்க்கவும் படிக்கவும் கேடு கெட்டு சீர் குலைந்து தரம் தாழ்ந்து கதி கலங்கி வீணாகிப் போய் இருக்கும் போலித் தமிழ் இலக்கிய, கலைப் படைப்புகள் போலி உலா வந்து விட்டில் பூச்சி போல் சாகும் இக்காலத்தில் ஒரு சித்தரின், மஹாகவியின், தீர்க்கதரிசியின் வேத சத்ய வாக்குகளை வெறுமனேயாவது மீட்டுரு செய்து மக்களுக்கு வழங்க அன்னை மஹாசக்தி எம்மைப் பணித்திருக்கிறாள்! தரங்கெட்ட வாய் சொல்லக் கூசும் இக்காலத் தமிழ் படைப்புக்களும் மீடியாக்களும் இருக்கும் இன்று, எம் பணி நிகழ அன்னை மஹாகாளியின் அனுமதி பெற்று விட்டேன்!**

பாரதியின் வாழ்க்கையை இக்கால மக்களுக்கு, குறிப்பாய் மாணவர்களுக்கு விரைவில் அருளிச்செய்ய அதே பாரதியாகிய ஞானசக்தி எம்முள் இருக்க வேண்டும்! ப்ரார்த்திக்கிறேன்!

**அதுவரை எம் ஆயுள் இருக்க வேண்டுகிறேன்!**
**ஓம் சக்தி!**

**Dr.மாதேஸ்வரன்.எம்.**

**மதறாஸ், ஆகஸ்ட் - 30, 2012.**